Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 3-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 8 ஆம் நாள் முஹர்ரம் 8 (21-5-64) வியாழக்கிழமை இதழ் 100

# கூட்டு ஆட்சிப்பேச்சு; தொடர்ந்து முயற்சி

## முட்டுக்கட்டை நிலைபற்றி மந்திரிசபை மீண்டும் ஆலோசனை

கொழும்பு, புதன்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரி ஐக்கிய முன்னணியும் சேர்ந்த கூட்டு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட முட்டுக்கட்டையை நீக்குவதற்காக இன்று தொடர்ந்து முயற்சிகள் நடைபெற்றன. இன்று காலையில் மந்திரிசபை மீண்டும் கூடி நிலைமையை ஆராய்ந்தது.

நேற்று மந்திரிசபை இரண்டு தடவை கூடியது. காலையில் நடைபெற்ற கூட்டத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணி சமர்ப்பித்த திட்டம் விவாதிக்கப்பட்டது. மாலை இடதுசாரித் தலைவர்களைச் சந்தித்துப் பிரதமர் பேசினார். இப்பேச்சுவார்த்தைகளின் பின்னர் மீண்டும் மந்திரிசபை இரவில் கூடியது. இக்கூட்டத்தில் இடதுசாரித் தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விபரங்களை பிரதமர் மந்திரிசபையில் தெரிவித்தார்.

கூட்டு அரசாங்கத்தில் இடதுசாரி முன்னணியினருக்கு ஆறு மந்திரிப்பதவி அளிக்கப்படவேண்டுமென்று கோரியதாகவும் இதுவே கூட்டு அரசாங்கப் பேச்சில் முட்டுக்கட்டை ஏற்பட காரணமென்றும் தெரியவருகிறது. என்றாலும் கூட்டு ஆட்சி பற்றி தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துமாறு பிரதமரை மந்திரிகள் கேட்டுக்கொண்டனர்.

## கூப்பனுக்குமேலும் 5 அவுன்ஸ் சர்க்கரை வழங்கப்படும்

யாழ்ப்பாணம், வியாழன்

வைகாசி விசாகப் பண்டிகையை முன்னிட்டு பங்கீட்டரிசிப் புத்தகத்திற்கு மேலும் 5 அவுன்ஸ் சர்க்கரை வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக யாழ்ப்பாணம் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி அறிவித்துள்ளார். 3 அவுன்ஸ் சர்க்கரை வழங்குவதற்கு முன்னர் உத்தரவிடப்பட்டிருந்தது. இப்பொழுது மேலும் 5 அவுன்ஸ் வழங்கப்படும்.

திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் விசாக தினத்தை முன்னிட்டு விடுமுறையாதலால் இவ்வாறப் பங்கீட்டரிசியை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் பொதுமக்கள் வாங்கிக்கொண்டால் கூட்டுறவுச் சங்கக்கடையினரும் உத்தரவு பெற்ற தனிப்பட்ட வர்த்தகர்களும் சமாஜங்களிடமிருந்து ஞாயிற்றுக்கிழமையே அடுத்தவார உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் இதனால் அடுத்த வாரம் விண் தாமதமின்றி பங்கீட்டரிசியை மக்கள் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவிக்கிறார்.

## இடமாற்றசபைகளில் ஆசிரியர்களுக்குஇடம்

கொழும்பு, புதன்

ஆசிரியர் இடமாற்றச்சபைகளில் ஆசிரிய சங்கங்களுக்குப் பிரதிநிதித்துவமளிக்கப்படவிருக்கிறது.

மாவட்ட, பிரதேச இடமாற்றச்சபைகளில் ஆசிரியசங்கங்களின் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கும்படி கல்வி இலாகாவுக்கு கல்வி கலாசார மந்திரி உத்தரவிட்டுள்ளார்.

இடமாற்றச் சபைகளில் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளுக்கு இடமளிப்பதற்காக அவசியமான சட்டத் திருத்தங்களைத் தயாரிக்குமாறு வித்தியாதிபதி திரு. ஈ. ஏ. டி. அல்விஸ் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

இடமாற்றச் சபைகளில் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஆசிரியர் சங்கங்கள் பல கோரிவந்தன.

## மகாநாடு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் மகாநாடு இம்மாதம் நடைபெறமாட்டாதெனவும் ஜூலை மாதத்துக்கு ஒத்திவைப்பதென முன்னணியின் கமிட்டி தீர்மானித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

## இலங்கையை குடியரசாக்கும் முயற்சி

கொழும்பு, புதன்

இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு அரசாங்கம் அமைத்ததும் முதல் வருட முடிவுக்குள்ளேயே இலங்கையை குடியரசாக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனக் கூறப்படுகிறது.

பார்லிமெண்டின் அடுத்த கூட்டத்தொடரில் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென்றும் இதற்கிடையில் குடியரசாக்குவதற்கான அரசியல் திட்டத்திருத்தங்களைச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பிரதமர் கேட்டுக்கொள்வாரென்றும் அறியப்படுகிறது.

இலங்கையைக் குடியரசாக்கும்பொழுது சிறுபான்மையினர் அடிப்படை உரிமைகள் சம்பந்தப்பட்ட ஷரத்துக்களும் சேர்க்கப்படுமென்றும் குடியரசாக்கினால் சிறுபான்மையினர் பிரச்னை சுலபமாகத் தீர்க்கப்பட்டுவிடுமென்றும் கருதப்படுகிறது.

இலங்கையை விரைவாகக் குடியரசாக்க வேண்டுமென்பதே இடதுசாரித் தலைவர்களின் நீண்டகால விருப்பமாகுமென்றும் சுட்டிக்காட்டுகிறது.

## கையெழுத்தில் மோசடி; கிளிநொச்சி எம். பி. புகார்

கிளிநொச்சி, புதன்

பரந்தன் உபதபால் கந்தோர் நிலைய அதிகாரிக்கு எதிராக அனுப்பப்பட்டுள்ள ஒரு பெட்டிசத்தில் தமது கையொப்பமிடப்பட்டு மோசடி செய்யப்பட்டிருப்பதாக கிளிநொச்சி எம். பி. திரு ஏ. சிவசுந்தரம் அரசாங்க அதிபருக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

உபதபாற்கந்தோர் நிலைய பொறுப்பு அதிகாரிக்கு எதிராகத் தாம் எவ்வித புகாரும் செய்யவில்லையென்றும் அவ்வித புகாருக்கும் தமக்கும் தொடர்பில்லையென்றும் தெரிவித்துள்ள திரு. சிவசுந்தரம் தமது கையெழுத்து மோசடி செய்யப்பட்டிருப்பதககத தெரிவித்திருக்கிறார், இதுபற்றி விசாரணைசெய்யுமாறு அரசாங்க அதிபர், பொலிஸ் சுப்ரின்டென்ட, இரகசியப் பொலிஸ் பகுதி உதவி இன்ஸ்பெக்டர், ஜெனரல் தபாற்பகுதி அதிபர் ஆகியோரை அவர் தந்தி மூலம் கேட்டுள்ளார்.

## மேற்கு பெர்லினுக்கு கென்னடி விஜயம்

பொன், மே. 20

மேற்கு பெர்லினுக்கு விஜயம் செய்யுமாறு அதிபர் விடுத்த அழைப்பை அமெரிக்க அட்டோர்ணி ஜெனரல் திரு. ரொபேர்ட் கென்னடி ஏற்றுக்கொண்டுள்ளார். திரு. கென்னடி சமீபத்தில் பொன்னுக்குப் புறப்படவிருக்கிறார்.

## விஞ்ஞானிகள் பரிவர்த்தனை

வாஷிங்டன், மே 20

விஞ்ஞானிகளைப் பரிவர்த்தனை செய்துகொள்வது சம்பந்தமாக அமெரிக்காவும், சோவியத் யூனியனும் புதிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் இரு வருட காலத்துக்கு அமுலில் இருக்கும்.

ஒரு நாட்டைச் சேர்ந்த 58 விஞ்ஞானிகள் மற்ற நாட்டுக்குச் செல்வதற்கு இந்த ஒப்பந்தம் வகைசெய்கிறது.

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்
FOLIDOL METASYSTOX
கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்
PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

மணிவாக்கு

ஒரே உலகமாக இல்லாவிட்டால் இந்த உலகில் நான் வாழ விரும்பமாட்டேன்.

—மகாத்மா காந்தி.

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு வைகாசி ௴ 8 உ (21-5-64)

## பண்டாரநாயக்கா கொள்கைக்கு முரண்

புகையிரதப் பிரிவு குமாஸ்தாக்கள் சேவைக்கு தமிழ் மொழி மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள பதினேழு தமிழருக்கு நியமனம் வழங்குவதற்கு ரயில்வே ஜெனரல் மனேஜர் மறுத்திருக்கிறார். தமிழ், சிங்களம், ஆங்கிலம் இவற்றில் எந்த மொழி மூலமும் அரசாங்க சேவைக்குத் தெரிவு செய்யப்படலாமென்றும் மூன்று வருடங்களில் அவர்கள் சிங்கள அறிவு பெறவேண்டுமென்றும் சட்டம். இச்சட்டப்படி, 17 குமாஸ்தாக்களுக்கும் உடனடியாக வேலை வழங்குமாறு திறைசேரி பிறப்பித்த உத்தரவை ரயில்வே அதிபர் ஏற்க மறுத்து அரசாங்கத்துக்கு அப்பீல் செய்திருக்கிறார், இது நாட்டின் இன்றைய நிர்வாக அவலநிலைமைக்கு ஓர் எடுத்துக்காட்டு இதற்காக ரயில்வே ஜெனரல் மனேஜரை குறை கூறுவது சரியல்ல. தனிச் சிங்களச் சட்டமும் அதனை அமுல் நடத்தும் கண்மூடி முறையும்தான் இதற்குக் காரணம்.

பதினேழு குமாஸ்தாக்களுக்கு வேலை வழங்குவதனை மட்டுமோ ரயில்வே ஜெனரல் மனேஜருக்கும் திறைசேரிக்குமிடையில் தோன்றியுள்ள சர்ச்சைக்கு தீர்வுகாண்பதன் மூலமோ இதுபோன்ற பிரச்னைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட முடியாது. நாம் பல தட்வைகளிலும் இங்கு சுட்டிக்காட்டியதுபோல் முழுப் பிரச்னைகளையும் அடியோடு ஆராய்ந்து நிரந்தரமான சுமுகமான முடிவு காணவேண்டும். இல்லையேல் பிரச்னைகள் வளர்ந்துகொண்டுதானிருக்கும். கோடீஸ்வரன் வழக்குத் தீர்ப்பு வெளியானதும் மொழிப்பிரச்னைக்கும் சிறுபான்மையோர் பிரச்னைக்கும் நியாயமான, நிரந்தரமான தீர்வு காண்பதற்கு நல்லதொரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும் இதை அரசாங்கம் தவறவிடக்கூடாதென்றும் குறிப்பிட்டிருந்தோம். அந்த வழக்கின் தீர்ப்பை ஆட்சேபித்து அப்பீல் செய்யப்பட்டிருப்பதால் அதுபற்றி நாம் இப்பொழுது எதுவும் சொல்வதற்கில்லை.

என்றாலும் கோடீஸ்வரன் வழக்குத் தீர்ப்பு அப்பீல் முடிவு தெரியும்வரை உத்தியோக மொழி அமுல் சம்பந்தமாக மேற்கொண்டு எதுவித நடவடிக்கையுமெடுப்பது சம்பந்தமாக தாம் ஆலோசனை கூறுவதற்கு இல்லை என்று அட்டோர்ணி ஜெனரல் தெரிவித்திருந்தும்கூட கட்டாய ஓய்வு உத்தரவுகள் தொடர்ந்து வழங்கப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது.

கட்டாயஓய்வு உத்தரவுகளை வாபஸ் பெறுமாறு திரு. செல்வநாயகம் கேட்டுக்கொண்டிருக்கிறார். இதே சமயம் கட்டாய ஓய்வு உத்தரவுகளின் விளைவு பற்றியும் அந்த உத்தரவுகளை வாபஸ் பெறச் செய்வதற்கு சமசமாஜக்கட்சியினரின் உதவியையும் ஒத்துழைப்பையும் தமிழரசுக் கட்சியினர் நாடியுள்ளதாகவும் கிடைத்துள்ள செய்தி வரவேற்கத்தக்கதாகும்.

கட்டாய ஓய்வு உத்தரவு சம்பந்தமாகவும் தமிழ்மொழி மூலம் புகையிரதப் பிரிவுக் குமாஸ்தாக்கள் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 17 குமாஸ்தாக்கள் சம்பந்தமாகவும் காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தயாரித்த ஒரு மகஜரை, இச்சமயத்தில் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

"உத்தியோக மொழி என்ற போர்வையில் சேவையிலுள்ள ஊழியர்கள் வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இடம் வைக்கக் கூடாது."

"ஒருவர், தாம் எவ்வித தவறும் செய்யாமல், மொழி மாற்றம் மட்டும் காரணமாக வேலை பெறும் வாய்ப்பை இழக்காமலிருக்கவேண்டியது முக்கியம்."

திரு. பண்டாரநாயக்காவின் இக்குறிப்புக்கள், அவரது கொள்கைகளைப் பின்பற்றுவதாகக் கூறும் பிரதமரின் விசேஷ கவனத்துக்கு உகந்தவை. இனி இன்றுள்ள நிலைமையை ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது அவரது கடமை. கட்டாய ஓய்வு உத்தரவுகளினால் ஏற்படக்கூடிய விளைவுகளைத் தவிர்ப்பதற்கும் தமிழரின் பிரச்னைகளை சுமுகமாகத் தீர்ப்பதற்கும் இன்னும் சந்தர்ப்பம் நழுவிவிடவில்லை.

# கோப்பாய் தொகுதி மக்கள் சுகாதார வார விழா

## இரத்ததானம் அளிப்பதன் முக்கியத்துவம்

கோப்பாய் சுகாதாரத் தொகுதி மக்கள் சுகாதாரவார விழாவொன்றினை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இது சம்பந்தமான வேலைகளைக் கவனிக்கும் பொருட்டு கமிட்டியொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் எட்டாம் திகதி முதல் பதினான்காம் திகதிவரையும் நடைபெறவிருக்கும் மக்கள் சுகாதார வாரவிழாவில் பொருட்காட்சி, இரத்ததான நிலையம் ஆகியவையும் இடம் பெறுகின்றன. இப்படியானதொரு இயக்கம் ஆஸ்பத்திரிக்கு வெளியாக நடைபெறுவது இதுவே முதற்தடவை.

### முக்கிய தேவை

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலுள்ள இரத்த வங்கியில் இரத்தம் மிகக் குறைவாக இருப்பதால் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் சுற்றுப்புறங்களிலும் இருந்து இங்கு வரும் நோயாளர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள். சில சமயங்களில் தேவையான இரத்தமில்லாத காரணத்தால் நோயாளர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டு விடுகிறது. இப்படியான ஒரு முக்கிய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மேற்கூறப்பட்ட இயக்கமொன்று அவசியம் தேவை என்பது தெளிவு.

கோப்பாய்த் தொகுதியில் ஆரம்பிக்கவிருக்கும் இரத்தான இயக்கத்தில் பொது மக்கள் எல்லோரும் கலந்துகொண்டு இரத்ததானமளிக்க வேண்டுமென்றும் இந்த இயக்கம் வெற்றி பெறுவதற்கு மக்களின் பூரண ஒத்துழைப்பு இன்றியமையாதது என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவிக்கின்றனர்.

உங்களின் இரத்தம்—நீங்கள் அளிக்கும் சிறிதளவு இரத்தம். ஒரு உயிரைக்காப்பாற்றுகிறது என்பதை நீங்கள் உணர வேண்டும். இரத்ததானம் செய்வதன் மூலம் ஒருவரின் உயிரைக் காப்பாற்றிவிட்ட பெருமையை நீங்கள் அடைகிறீர்கள் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். இரத்ததானம் செய்வதால் உடல்வலிமை குறைகிறது என்ற தப்பான கருத்து உங்கள் மனதிலிருந்து நீங்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### பத்து ரூபாய் அன்பளிப்பு

இரத்ததானம் அளிக்கும் ஒவ்வொரு நபருக்கும் பத்து ரூபாய் வழங்கப்படும். அத்துடன் அவரின் சமூக சேவையைப் பாராட்டும் முகமாக அத்தாட்சிப் பத்திரமொன்றும் அளிக்கப்படும்.

மக்கள் சுகாதாரவாரவிழாக் காலத்தின் போது, தினமும் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் மக்கள் இரத்ததான நிலயத்திற்குச் சென்று இரத்தம் கொடுக்கலாம்.

இது சம்பந்தமாக கிராமந்தோறும் திரைப்படக்காட்சிகளும் கூட்டங்களும் நடத்த ஒருங்குகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே பலவிடங்களில் படக்காட்சிகளும், கூட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன.

இரத்ததான நிலயம், கோப்பாயிலுள்ள மகளிர் பயிற்சிக் கல்லூரியில் நிறுவப்படும். ஜூன் மாதம் 8-ம் திகதி முதல் 14-ம் திகதிவரை, பொது மக்கள் இந்த நிலையத்துக்குச் சென்று இரத்த தானம் செய்யலாம். இரத்ததானமளிக்க விரும்புவர்கள் கோப்பாய் வைத்திய அதிபரிடம் தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். கோப்பாய் வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. ஜ. ஏ. ஜோசப், சுகாதார காரியாலய பொறுப்பாளர் திரு. கே. ரி. முத்தையா ஆகியோர் இவ்வியக்கத்தின் பிரதான அமைப்பாளர்களாகும்.

## டட்லி விலக வேண்டும்

இரத்தினபுரி, புதன்

முற்போக்கான கட்சிகள் கூட்டுச் சேர்வது குறித்து திரு. டட்லி சேனநாயக்கா அஞ்சுகிறார். அதனாலேதான் இணைப்பு அரசாங்கத்தால் நாட்டுக்கு நன்மை இல்லை என்று சொல்லி வருகிறார் என்று திரு. ஜீ. டபிள்யு. சமரசிங்கா பெல்மதுளையில் பேசும்போது கூறினார்.

"திரு டட்லிசேனநாயக்காவுக்கு, உத்தேச இணைப்பு அரசாங்கம் ஏற்பட்டால் தமக்கும் தமது கட்சிக்கும் செல்வாக்கு இல்லகமல் போய்விடுமோ என்ற பயம் உண்மையில் திரு சேனநாக்காவுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் ஏழைகளின் மீது இரக்கம் இருக்குமானால் அவர்கள் அரசியலிலிருந்து விலக வேண்டும்" என்றும் அவர் சொன்னார்.

## உதவுவதில் உலோபம் வேண்டாம்

மொறட்டுவை, புதன்

"கடந்த எட்டு வருடங்களாக இவர்கள் தமது சகோதர சகோதரிகளான இந்நாட்டுமக்களுக்குச்செய்துவரும் சேவை ஒப்பில்லாதது" என்று மொறட்டுவை இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் 9-ம் ஆண்டு நிறைவுவிழாவுக்குத் தலைமை வகித்த பிரதம நீதிபதி பஸநாயக்கா கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில், "ஏழைகளுக்கு உதவும்போது உலோபஞ் செய்யாதீர்கள். இந்நாட்டு மக்கள் நம்மனைவரதும் சகோதர சகோதரியரே அவர்கள் துன்பத்தை நமது துன்பமாக மதித்து வாழ்க்கைப் போராட்டத்தில் அவர்களும் வெற்றி பெற நாம் உதவவேண்டும்".

## "பேச்சில் பெரிது செயல்"

கொழும்பு, புதன்

"தனது தீர்மானங்களைச் செயல்படுத்துவது பேசுவதை விடச் சிறந்தது என்ற காரணத்தினால் கடந்த 3 மாதங்களாக தான் அரசியல் மேடைகளில் பேசியதில்லை" என்று திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பலேகம பூர்வராம ஆலயத்தில் நிகழ்ந்த பரிசளிப்புவிழாவில் பேசுகையில் கூறினார்.

புத்தபிக்குகள் மட்டும் இல்லையென்றால் அந்நியர் ஆட்சியில் நமது மொழி, மத கலாச்சாரமெல்லாம் அழிந்தொழிந்திருக்கும். நமது மதத்தையும் மொழியையும் நமக்குப் பாதுகாத்துத் தந்தவர்கள் பிக்குகளே என்றும் அவர் கூறினர்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

சால்வையும் பார்சலில், தமிழ் அதிகாரி இருக்கும் விலாசத்துக்கு இன்னும் அனுப்பிவருவதாயும், அவ்வாலிபருக்கு விவாகம் நடந்தபோது தமிழ் அதிகாரி அங்கு சென்றதும் அக்குடும்பத்தார் 'மாத்தியா மாத்தியா' என்று கூறி மிக அன்பு காட்டி விசேஷ மரியாதை செய்ததாகவும் அத் தமிழ் அதிகாரி இரு நாட்களுக்கு முன் தெரிவித்தார்.

இந் நாட்டிலே தமிழரும் சிங்களவரும் அன்புச் சகோதரர்களாக மீண்டும் வாழ முடியுமென்ற நம்பிக்கை இதனால் ஏற்படுவதாக இருக்கிறதல்லவா?

* * *

நிலவும் புனலும் நிறைவாள ரவும்
இலகுஞ் சடையார்க்கிடமாம் எழிலார்
உலவும் வயலுக்கொளியார் முத்தம்
விலகுங்கடலோர் வேணு புரமே.

— திருஞானசம்பந்தர்.

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலே இப்போது மிக முக்கியமான அரசியல் பேச்சு நடந்து வருகிறதல்லவா? இப்பேச்சுகளின் போக்கை அறிந்து வந்துள்ள ஓர் அன்பருடன் நேற்றுப் பேசிக் கொண்டிருந்தேன்.

"கூட்டு அரசாங்கம் ஏற்படப் போகிறதா இல்லையா என்று சந்தேகத்துக்கே இடமில்லை. எப்படியும் கூட்டு அரசாங்கம் அமைகக பிரதமமந்திரி உறுதி கொண்டிருக்கிறார். யார் எதிர்த்தாலும் கேட்கமாட்டார். இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த மூன்று தலைவர்களான டாக்டர் என். எம். பெரேரா, பிலிப் குணவர்த்தனா, டாக்டர் விக்கிரமசிங்கா இவர்கள் மூவரும் அம்மந்திரி சபையில் அங்கம் வகிப்பார்கள்" என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இதற்கிடையே முரண்பட்ட பலசெய்திகள் கிடைக்கின்றன எது நடந்தாலும்சரி. நடப்பதெல்லாம் நன்மைக்குத்தானே!

* * *

முன்னர் 'தினகரன்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்து பின்னர் இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளரான அன்பர் கைலாசபதிக்கு நாளை வெள்ளிக்கிழமை ஆபிரிக்காவிலுள்ள சூடான் தலைநகரான கார்ட்ருமிலே கல்யாணமென்ற சந்தோஷச் செய்தியை அவரது தந்தையாரான மலாயன் பென்சனர் கனகசபாபதி அவர்கள்மூலம் அறிந்தேன்.

மணப்பெண் யார் தெரியுமா? மாணிக்கஇடைக்காடர் (ஸி. ஸி. எஸ்.) அவர்களின் புதல்வி செல்வி சர்வமங்களம். இங்கு ஸி. ஸி. எஸ். பதவியை உதறித்தள்ளிவிட்டு மலாயா சர்வகலாசாலையில் கணக்குப் பேராசிரியராகச் சென்ற இடைக்காடர் இப்போது ஐ. நா. உணவு, விவசாய ஸ்தாபனத்தின் அதிகாரியாக ஆபிரிக்காவில் கடமையாற்றுகின்றார்.

மாப்பிள்ளை கைலாசபதி பர்மிங்காம் சர்வகலாசாலையிலே டாக்டர் பட்டத்துக்காகப் பயிற்சி பெறுகின்றார். அவர் விசேஷ ஆராய்ச்சிக் கட்டுரைக்கு எடுத்துக் கொண்ட விஷயம் "வீரத்தமிழர் காலம்" என்பதாம். இதுவரை யாரும் இந்த விஷயத்தைப்பற்றி விசேஷ ஆராய்ச்சி செய்ததில்லையாம் இன்னும் அவர் இரண்டுவருட காலம் பிரிட்டனில் இருக்க வேண்டியிருக்குமென அறிகிறேன்.

திருமணத்தை கார்ட்ரும் சர்வகலாசாலையிலுள்ள சமஸ்கிருத பேராசிரியர் சுந்தரம் வைதிக முறைப்படி செய்துவைக்கின்றாராம். அதற்கு ஒரு தகுந்த ஆள் அங்கு தயாராக இருக்கிறார்தானே. வாழ்க இப்புதிய மணமக்கள்.

* * *

ஒரு மகிழ்ச்சியான கதை கேள்விப்பட்டேன். நீங்களும் கேளுங்கள். ஒரு தமிழர். மலைநாட்டிலே போஸ்ட்மாஸ்டராக இருந்தாராம். உதவி போஸ்ட்மாஸ்டராக ஒரு சிங்கள வாலிபர் அங்கு வந்து சிறிதுநேரம் தமிழ் அதிகாரியுடன் பேசியதும், தான் தன் தகப்பனரை சமீபத்தில் இழந்துவிட்டதாயும் இனி அவர்தான் தனக்குத் தகப்பன் என்று கூறியதுடன் நில்லாது தினசரி அவரது வேட்டி துணிகளை துவைத்து காயப்போட்டு மகிழ்ச்சியுடன் பணி செய்து வந்தார். வேண்டாமென்றாலும் கேட்கமாட்டாராம். பின்னர் அத் தமிழ் அதிகாரி மாற்றலாகிச் சென்றபோது பொல்காவலை ஸ்டேஷனிலே பலரும் காண பிளாட்பாரத்தில் அவரது காலை அந்தச் சிங்கள வாலிபர் கட்டிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாராம். இந்தக் காட்சியை நினைத்துப் பார்த்தேன் நம்பமுடிகிறதா?

வருடாவருடம் புதுவருடத்தின்போது புதுவேட்டியும்

(4-ம கலம் பார்க்க)

லாவோஸ்நெருக்கடி

# இராணுவ நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ளும்!

## சீனவுக்கு பிரிட்டன் கோரிக்கை

### கட்டுப்பாட்டு கமிஷனிலிருந்து போலந்து வெளியேறியது

வாஷிங்டன், மே 20

லாவோஸின் சுதந்திரத்தையும் நடுநிலைமையையும் பாதுகாப்பதற்கு இராணுவ நடவடிக்கைகள் உட்பட பல தீவிரமான நடவடிக்கைகளையும் அமெரிககா மேற்கொள்ளலாம் என்று அமெரிக்க அரசாங்கஅதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். லாவோஸில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பெரும் நெருக்கடியொன்றைத் தீர்த்துவைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை போன்று இது இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆனல் அமெரிக்க துருப்புகள் நேரடியாக லாவோஸில் இறங்கமாட்டாதென்று ஊர்ஜிதமான சில செய்திகள் கூறுகின்றன

லாவோஸில் ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் அமெரிக்கா தனது துருப்புகளை தாய்லாந்துக்கு அனுப்பியது. இதன்பின்னர் அமெரிக்கத் துருப்புகள் தாய்லாந்தில் இருந்த வண்ணமே லாவோஸில் தலையிட ஆரம்பித்தது. இதேபோன்று இம்முறையும் அமெரிக்கா தனது துருப்புகளை அங்கு அனுப்பி வைக்கலாம் எனத் தெரிய வருகிறது. மோசமாகிவரும் லாவோஸ் நெருக்கடியைத் தீர்த்து வைப்பதில் அமெரிக்கா அதிக கவனமெடுத்து வருகிறது.

**லாவோஸ் நிலைமை**

லாவோஸ் நடுநிலைமை படைகளின் தளபதி ஜெனரல் கொங்லீ, புதிதாக அமைத்துக் கொண்ட தளத்துக்கு சுமார் இரண்டுமைல் தூரத்தில் கம்யூனிஸ்ட் பதட்லாவோ துருப்புகள் வந்துவிட்டதாக கடைசியாகக் கிடைத்தசெய்திகள் கூறுகின்றன. ஜெனரல் கொங்லீயின் புதிய தலைமைக் காரியாலயத்தை நோக்கி பதட்லாவோ துருப்புகள் முன்னேறிச் சென்று கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**பிரிட்டன் கோரிக்கை**

நடுநிலைமை படைகளுடன் சண்டை செய்வதை நிறுத்துமாறு பதட்லாவோ படைகளைக் கோரும்படி கம்யூனிஸ்ட் சீனவை பிரிட்டன் கேட்டுள்ளது. கமயூனிஸ்ட் பதட் லாவோ படைகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறு சீன தனது செல்வாக்கை உபயோகிக்க வேண்டுமென்றும் பிரிட்டன் தெரிவித்துள்ளது. அமெரிககாவின் ஆலோசனைகளைத் தொடர்ந்தே பிரிட்டன் மேற்கூறிய யோசனையை சீனவுக்கு விடுத்துள்ளது.

**சம்பந்தமில்லை என்கிறது சீன**

லாவோஸில் நிலவும் நெருக்கடிகளுக்கு கம்யூனிஸ்ட் சீன காரணமில்லையென்றும் பதட்லாவோ துருப்புகளுக்கும் தங்களுக்கும் சம்பந்தமே கிடையாதென்றும் சீன அறிவித்துள்ளது. சீனத் துருப்புகள் லாவோஸ் எல்லைக்குள் என்றுமே பிரவேசிக்கவில்லையென்று சீனவிலிருந்து வெளியாகும் "நியூ சைன ஏஜன்ஸி" செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

**போலந்து வெளியேற்றம்**

லாவோஸுக்கான சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷனிலிருந்து போலந்து வெளியேறியுள்ளது. மறு அறிவித்தல் தனக்குக் கிடைக்கும்வரை லாவோஸ்சர்வதேச கட்டுபோட்டு கமிஷனில் அங்கம் வகிக்க முடியாதென்று போலந்துப் பிரதிநிதி அறிவித்துள்ளார். இதற்கான காரணம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

# 'ஸம்பியா' அக். 24ல் உதயமாகும்

லண்டன், மே 20

முப்பது லட்சம் மக்களைக் கொண்ட வட ரொடீஷியா, 'கொலம்பியா' என்ற புதிய பெயருடன் அக்டோபர் மாதம் 24-ந் திகதி சுதந்திரம் பெறும்.

வட ரொடீஷியாவுக்கு சுதந்திரம் வழங்குவதற்கான புதிய அரசியல் திட்டம்பற்றி பூரண உடன்பாடு கண்டிருப்பதாக லண்டனில் நேற்று அறிவிக்கப்பட்டது. வட ரொடீஷியாவின் தற்போதைய பிரதமர் திரு. கெனக் கவுண்டா சுதந்திர நாட்டின் முதலாவது ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வட ரொடீஷியாவுக்கு சுதந்திரம் வழங்குவது சம்பந்தமாக கடந்த இருவார காலமாக இங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினம் முடிவடைந்தது.

புதிய குடியரசு, அமெரிக்கா, பிரிட்டன் அரசியலமைப்பைக் கொண்டிருக்குமென்றும் மக்கள் சபையொன்றும் நிறுவப்படுவதுடன் அதற்காக 76 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமடையும் வட ரொடீஷியா செம்பு உற்பத்தியில் பெயர்போனது.

## பாக்-ருமேனியா வர்த்தக உறவு

ராவல்பிண்டி, மே 20

பாகிஸ்தானுக்கும் ருமேனியாவுக்குமிடையே நேற்று வர்த்தக ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இஸ்லாமிய பாத்தில் கைச்சாத்திடப்பட்ட இவ் ஒப்பந்தம் இரு நாடுகளின் வர்த்தக உறவுகளை மேலும் அபிவிருத்திசெய்ய வகைசெய்கிறது.

## அமெரிக்காவில் சாவன்

வாஷிங்டன், மே 20

அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் நேற்று அமெரிக்க பாதுகாப்பு காரியதரிசி திரு. மக்னமராவையும் முப்படைத் தலைவர் ஜெனரல் டெயிலரையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

இந்தியாவில் அதிக சக்தி வாய்ந்த ஜெட் போர் விமானத் தொழிற்சாலைகளை நிறுவ அமெரிக்காவிடம் இந்தியா உதவி கோரலாம் என்று எதர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு ஏராளமான பணம் செலவாகுமென்றும் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டால் தேவையான சகல ஜெட் போர் விமானங்களையும் இந்தியாவால் உற்பத்திசெய்ய முடியுமென்றும் அமெரிக்க அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## தமிழ் நாட்டுச் செய்திகள்

**'காஷ்மீர் எம்முடையது'**

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தால்தான் அது எதிர்காலத்தில் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்றும் காஷ்மீா பிரச்னை என்று ஒன்று கிடையாது 'அது எம்முடையது என்றும் நமது பிரதேசத்தை நாம் ஒரு பொழுதும் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று சென்னையில் நடைபெற்ற ஒரு பொதுக கூட்டத்தில் ஸ்ரீ வி கே. கிருஷ்ணமேனன் பேசும்போது கூறினர்.

**சாராயம் சிக்கியது**

15 டின்களில் 60 கலன் சாராயம் அடங்கிய கார் ஒன்று சென்னை, வடபகுதியிலுள்ள பொலிஸ் கோஷ்டியொன்றிடம் பிடிபட்டது. காருக்குள் இருந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டார்கள்.

**காங்கிரஸுக்கு எதிர்ப்பு**

எதிர்வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ்காரர்களுக்கு வாக்குகளைப் போடவேண்டாமென்று ஆலப்புழையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசும்போது கேரளப் பகுதி முஸ்லீம்லீக் தலைவர் ஸ்ரீ பபாகி தங்கல் முஸ்லிம் லீக் ஆதரவாளர்களைக் கேட்டுக்கொண்டார்.

**எம். எல். ஏ. மீது கல்வீச்சு**

பெண் எம். எல். ஏ. குமாரி டி. சுலோசனவின் காரைச் சுற்றிவளைத்து நின்று கல்லெறிந்ததாக 17 பேர்மீது பொலிசார் வழக்குத் தாக்கல் செய்தனர். இச்சம்பவம் சென்னையில் நடைபெற்றது.

**மோப்ப நாய் காட்டியது**

கொலை சம்பந்தமாகத் தேடப்பட்டவரை பொலிஸ் நாய் 'லார்டு பொலிசார்களுக்குக் காட்டிக்கொடுத்தது. சென்னையிலுள்ள தஞ்சை ஜில்லா மதுக்கூர் மடலப்பள்ளியில் நடந்த கொலைவழக்கில் 'டிமிக்கி' கொடுத்த தர்மன் (60 வயது) படுத்துத் தூங்குகையில் பிடிபட்டார்.

## புத்தகங்கள் எரிப்பு

ஜகர்த்தா, மே 20

தனது கொள்கைகளுக்கு எதிராகவுள்ள எல்லாப் புத்தகங்களையும் எரித்துவிடும்படி ஜனதிபதி சுகர்னே உத்தரவிட்டுள்ளார். ஜாகர்த்தாவிலுள்ள கல்வி அலுவலகத்தில் சுகர்னே கொள்கைகளுக்கு எதிர்மாருக இருக்கும் புத்தகங்களை ஒப்படைக்குமாறு இந்தோனேஷியா நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சமூக, விஞ்ஞான புத்தகங்கள் முதலாளித்துவத்தை ஆதரிக்கும் புத்தகங்கள் போன்றவை எரிக்கப்படவேண்டுமாம்.

# யு தாண்டுக்கு இந்தியா, பாக். அழைப்பு

பம்பாய், மே 20

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நடைபெற்ற காஷ்மீர் விவாதத்தில் கலந்து கொண்ட இந்திய கோஷ்டியின் தலைமைப் பிரதிநிதி திரு. சக்ளா, நேற்று நியுயோர்க்கிலிருந்து பம்பாய் வந்துசேர்ந்தார்.

பம்பாயில் அவர் நிருபர்களிடம் பேசுகையில், ஐ. நா. விவாதத்தில் பாகிஸ்தான் தெரிவித்த எந்தக் கருத்துக்குமே பிரதிநிதிகள ஆதரவு தெரிவிக்கவில்லை என்றும் காஷ்மீரில் வாக்குப்பதிவு நடத்தவேண்டுமென்பது பற்றியோ அல்லது திரு. ஷேக் அப்துல்லா பாதுகாப்புச் சபைக்கு அழைக்கப்படவேண்டுமென்பது குறித்தோ தலைவர்கூடத் தமது உரையில் ஒன்றுமே தெரிவிக்கவில்லையென்றும் கூறினர்.

ஐ. நா. பிரதம காரியதரிசி யுதாண்டை இந்தியாவுக்கு வரும்படி அழைததுள்ளோம அவர் இங்கு வருவதற்கும், காஷ்மீர் பிரச்னைககும் எந்த வித சம்பந்தமும் கிடையாது. தனிப்பட்ட முறையில் வரும்படியே அவரைக கோரியுள்ளோம். இங்கு வந்து அவர் எங்கு வேண்டுமென்ருலும் போகலாம். யாருடனும் பேச்சுகள் நடத்தலாம் என்றும் திரு. சக்ளா தெரிவித்தார்.

நியுயோர்க்கிலிருந்து தாயகம் திரும்பும் வழியில் திரு. புட்டோ நேற்று லண்டனில் தங்கினர். பத்திரிகை நிருபர்களுக்கு திரு. புட்டோ அளித்த பேட்டியில் ஐ.நா. பிரதமகாரியதரிசி யுதாண்டை பாகிஸ்தானுக்கு வரும்படி கேட்டுள்ளோமென்று கூறினர்.

ஐக்கியநாடுகள் சபையில் காஷ்மீர் விவாதத்தின்போது பாகிஸ்தான் தெரிவித்த கருத்துகளை பிரதிநிதிகள் வரவேற்றனர் என்றும் அநேகமாக இந்த விவாதத்தில் பாகிஸதானுக்கு வெற்றி கிடைத்துள்ளதென்றும் திரு. புட்டோ கூறினர்.

# அகதிகள்-பொலிஸார் கைகலப்பு: ஐவர் மாண்டனர்!

ஓரிஸா, மே 20

கிழக்கு பாகிஸ்தான் அகதிகளுககும் பொலிஸாருக்குமிடையே நேற்று ஏற்பட்ட கைகலப்பு காரணமாக ஐவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். எண்மர் காயமடைந்தனர்.

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளை இங்கு ஒரு கிராமத்தில் குடியமர்த்துவது சம்பந்தமாகவே இக் கைகலப்பு ஏற்பட்டதென்று கூறப்படுகிறது. ஆனல் உண்மையான விபரம் தெரியவில்லை.

அமைதியை நிலைநாட்ட பொலிஸார் முயற்சித்த பொழுது பொலிஸாருக்கும் அகதிகளுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டதென்றும் இதன் பின்னர் பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. சில பொலிஸாரும் காயமடைந்துள்ளனர்.

## ஷேக் விருப்பம்

ஸ்ரீநகர், மே 20

இந்தியாவும் பாகிஸ்தானும் நண்பர்கள் போன்று உடன் பிறந்தவர்கள் போன்று இருப்பதையே தாம் விரும்புவதாக காஷ்மீரின் முன்னுள் பிரதமர் திரு. ஷேக் அப்துல்லா தெரிவித்தார்.

தாம் பாகிஸ்தானுக்கு செல்லும்போது அங்கு அரசாங்கத் தலைவர்களையும், வேறு கட்சித் தலைவர்களையும் சந்தித்துப் பேச எண்ணம் கொண்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

## பாதுகாப்புச் சபை

நியுயோர்க், மே 20

தென் வியட்னுமும் அமெரிக்காவும் தம் பகுதியை ஆக்கிரமிப்புச் செய்வதாக கம்போடியா தெரிவித்த குற்றச்சாட்டுகளை ஆராயும் பொருட்டு நேற்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை கூடியது. அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு வேலைகளை உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்று கம்போடியா தெரிவித்துள்ளது. கம்போடியாவின் குற்றச்சாட்டுகளை அமெரிக்கப் பிரதிநிதி மறுத்துள்ளார். விவாதம் நாளைவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவின் மற்றுமொரு முயற்சி

வாஷிங்டன், மே 20

விண்வெளியில் மூன்று பேரைத் தாங்கிச் செல்லும் மாதிரிக் கப்பலொன்றை அமெரிக்கா செவ்வாய்க் கிழமை அனுப்பிவைக்கும்.

## நிலக்கரி விநியோகம்

புதுடில்லி, மே 20

வீட்டு உபயோகத்துக்கான மூன்று ரக நிலக்கரி விநியோகத்தின்மீதான கட்டுப்பாடுகள் அகற்றப்படுமென்று எஃகு கனரக மந்திரி திரு. சுப்பிரமணியம் அறிவித்துளளார்.

## கென்னடி சமாதிக்கு சாவன் மரியாதை

வாஷிங்டன், மே 20

இங்கு விஜயம் செய்துள்ள இந்திய பாதுகாப்பு மந்திரி சாவன், நேற்று காலஞ்சென்ற அமெரிக்க ஜனதிபதி கென்னடியின் சமாதியில் மலர் வளையம் சாத்தி மரியாதை செலுத்தினர்.

## பெருகிவரும் அகதிகள்

புதுடில்லி, மே 20

இவ்வருட ஜனவரி மாதம் முதல் இதுவரை கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து மூன்று லட்சத்து 87,000 அகதிகள் இந்தியாவுக்கு வந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதுடில்லியில் சூடான் அதிபர்

புதுடில்லி, மே 20

சூடான் அதிபர் அபூத் இன்று புதுடில்லி வந்து சேர்ந்தார். இங்கு அவர் ஐந்து நாட்கள் தங்கியிருந்து பல பகுதிகளையும் சுற்றிப்பார்ப்பார்.

## கைத்தொழில் பொருட்காட்சி

கொழும்பு, புதன்

அடுத்த வருடம் ஜனவரியில் நடைபெறவிருக்கும் கைத்தொழிற் பொருட்காட்சிக்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் நடைபெறவிருக்கும் இப்பொருட்காட்சியில் ஒன்பதரை லட்சம் ரூபா செலவானமண்டல ஆராய்ச்சி நிலையமொன்றும் அமைக்கப்படவிருக்கிறது. 31 நாட்கள்வரை நடைபெறும் இப்பொருட்காட்சியில் பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

# "இடதுசாரிகளுடன் இணைவதற்கு மக்கள் இணங்க மாட்டார்"

-- ஆர். ஜி.

பொல்காவலை, புதன்

"காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் பெயரைச் சொல்லிப் பதவிக்கு வந்த திருமதி பண்டாரநாயக்கா 'பண்டாரநாயக்கா பிரதிபத்தியா'வை உண்மையில் அனுசரிப்பவராயிருந்தால் ஒருபோதும் இடதுசாரிகளுடன் இணைப்பு அரசாங்கம் ஏற்படுத்த முனைந்திருக்கவே மாட்டார்" என்று கிறனகண்ட வித்தியாலயத்துக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்: சென்ற தேர்தலின்போது தனது கணவரின் கொள்கைகளுக்கு அமையவேதான் நாட்டை ஆளுவேன் என திருமதி பண்டாரநாயக்கா பொது மக்களுக்கு உறுதியளித்தார். திருமதி பண்டாரநாயக்காவின் கணவர் "இலங்கையில் சர்வாதிகார ஆட்சி ஏற்படுவதைத் தடுப்பதற்காக இடதுசாரிகளுக்கெதிராக நான் போராடுவேன்" எனப் புத்தகுருமாருக்கு முன் சத்தியப்பிரமாணஞ் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே பொதுமக்கள், திருமதி பண்டாரநாயக்கா இடதுசாரிகளுடன் ஒருபோதும் இணையமாட்டார் என்ற நம்பிக்கையின் பேரிலேயே அவரது கட்சிக்குத் தமது வாக்குகளை அளித்தார்கள். மக்களது விருப்புக்கெதிராகத் திருமதி பண்டாரநாயக்கா இடதுசாரிகளுடன் இணைய முயல்வது வேதனை தருவதாகும்.

தமது கணவரது அழிவுக்குக் காரணமானவர்கள் எனப் பல சந்தர்ப்பங்களிலும் திருமதி சிறிமாவோ குறிப்பிட்டுவந்த இடதுசாரித் தலைவர்களான பிலிப், என். எம்., கொல்வின் ஆகியோருக்கு அவர் மந்திரிப் பதவிகளை அளிக்க முன்வருவதோ விந்தையிலும் விந்தையானது.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
Richard Harrison
in
Gladiators Seven
Techniscope - Eastman colour

## நிரூபித்தால் ராஜினமா செய்வோம

தெரணியகலை, புதன்

கிராமசேவகர் நியமனம் சம்பந்தமாக சுதந்திரக்கட்சி மந்திரிகளும், எம். பி.க்களும் லஞ்சம் வாங்கியதாகக் கூறப்படுகிறது. ஆனால் இதை நிரூபிப்பதற்கு எவரும் முன்வரவில்லை இதனை யாராவது நிரூபித்தால், அந்த மந்திரிகளோ எம். பி.க்களோ ராஜினமாச் செய்யத் தயாராக இருக்கிறார்கள என்று ரத்தோட்ட எம். பி. திரு. சந்திரசிறி முணவீரா கலிகமுவாவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

சுதந்திரக் கட்சியைப் பற்றி ஐக்கிய தேசியக் கட்சியினர் தவறாகப் பிரசாரம் செய்து வருகிறார்களென்றும், இப்பிரசாரங்கள் மக்களைத் தவறான வழிக்கு அழைத்துச் செல்கின்றனவென்றும், எந்தப் பிரச்னையும் சுலபமாகத் தீர்க்கக் கூடிய சக்தி பிரதமரிடம் உண்டென்றும் அவர் தொடர்ந்து பேசும்போது கூறினார்.

## 'பீலிக்ஸ் நேர்மையானவர்'

கொழும்பு, புதன்

விவசாய கூட்டுறவு மந்திரி திரு. பீலிக் டயஸ பண்டாரநாயக்கா ஒரு நேர்மையான மனிதர். அயராது உழைக்கக்கூடியவர், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாதவர் என்று கினிகதேனவில் நடைபெற்ற ஐக்கிய கூட்டுறவு விழாவில் அபகிதமிசாயா சங்நாயக்க மகாதேரோ கூறினார்.

## தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது

கொழும்பு, புதன்

தேயிலை உற்பத்தியில் இலங்கை முதல் ஸ்தானம் வகிப்பதாகச் சர்வதேச தேயிலைச் சபையின் புள்ளிவிபரத் திரட்டுக் கூறுகிறது. 1963-ம் வருடத்தின் முற்பாதியில் 269, 402 றாத்தல் தேயிலையை இலங்கை உற்பத்திசெய்துள்ளது. 1962-ம் ஆண்டின் முதற்பாதி உற்பத்தியைவிட 14, 726 றாத்தல் அதிகமாக 1963-ம் ஆண்டில் இலங்கையால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியா 1963-ம் ஆண்டின் முற்பாதியில் 200, 940 றாத்தல் தேயிலைதான் உற்பத்தி செய்ததென்பதும் அதன் முந்திய வருட உற்பத்தியிலும் பார்க்க இது 15, 560 றாத்தல் வரையில் அதன் தேயிலை உற்பத்தி குறைந்துள்ளதென்றும் தெரிய வருகிறது.

## பெற்றூர்-ஆசிரியர் சங்கக் கூட்டம்

பருத்தித்துறை, புதன்

புலோலி மெதடிஸ்த அரசினர் தமிழ்க்கலவன் பாட்சாலைப் பெற்றூர்-ஆசிரியர் சங்க விசேட பொதுக்கூட்டம், புதிய தலைமை ஆசிரியர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பாடசாலையின் அவசிய தேவைகள் சம்பந்தமாக உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரத்தைப் பேட்டி காண ஒரு குழு தெரிவுசெய்யப்பட்டதுடன் பிரதி வெள்ளிதோறும் கூட்டுப்பிரார்த்தனை நடத்தப்படவேண்டும் எனவும் முடிவுசெய்யப்பட்டது.

## கொட்டில்கள் தீக்கிரை

பருத்தித்துறை, புதன்

புலோலி அரசினர் வைத்தியசாலையை அடுத்துள்ள பகுதியில் கடந்த இரவு பல கள்ளுக்கொட்டில்கள் தீக்கிரையாக்கப்பட்டுவிட்டதாகத் தெரியவருகிறது.

இரு பிரிவினருக்கிடையில் உள்ள மோதலே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

## உணவுக்களஞ்சியங்கள் அமைக்கப்படும்?

கொழும்பு, புதன்

உணவு அமைச்சு உணவுப் பொருள்களைச் சேமிப்பதற்கு புதிய களஞ்சியங்களை நிறுவவும் மேலதிக ஏற்றுமதி வாகன வசதி செய்யவும் அனுமதி தருமாறு அரசாங்கத்தைக் கோரியுள்ளது. உணவு, விவசாய, கூட்டுறவு அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா உணவுக் கமிஷனரையும், கூட்டுறவு மொத்த வியாபாரப் பகுதித் தலைவரையும் உடனடியாகஎவ்வளவு உணவு சேமிக்கப்பட வேண்டுமென்பதற்கும் ஏற்றுமதிக்கு வேண்டிய வாகனங்களின் எண்ணிக்கை பற்றியும் விபரம் தருமாறு கோரியுள்ளார்.

கடந்த வாரத்தில் 100,000 டன் அரிசி, சீனி, மா, உள்ளிட்ட உணவுப் பண்டங்கள் சேமித்து வைக்கவோ ஏற்றுமதி செய்யவோ வசதியில்லாததால் வெளியே போடப்பட்டு அவற்றில் 60 சதவிகிதம் வீணுகி விட்டதென்று ஒரு செய்தி கூறுகிறது.

## கிருஷ்ணமேனன் கண்டனம்

புதுடில்லி, மே 20

இந்தியாவுக்கு எதிராக பகைமையான பிரசாரத்தை பாகிஸ்தான் தீவிரப்படுத்திக் கொண்டிருப்பதாகவும் போரை விரும்பாததாலேயே இந்தியா பேச்சுவார்த்தையில் நம்பிக்கை வைத்துக் கொண்டிருப்பதாகவும் முன்னுள் பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் தெரிவித்துள்ளார்.

# "இளைஞர்களிடம் ஆத்மீக உணர்ச்சி ஏற்படுத்தவேண்டும்"

## விவேகானந்தர் விழாவில் மாவட்டநீதிபதி பேச்சு

பருத்தித்துறை, புதன்

"ஆத்மீக உணர்ச்சி நம் இளைஞர்கள் மத்தியில் மாண்டு விடுமோ என்ற அச்சம் தலை காட்ட ஆரம்பித்துள்ளது. மார்க்கசம்பந்தமான எந்தக் கூட்டங்களிலும் கலந்து கொள்ளும் ஆர்வமும் மக்களிடையே அருகி வருகிறது. இந்த நிலை மாருவிட்டால், இதை மாற்ற வழி வகைகள் காணத்தவறினுல் நாஸ்திக அடிப்படைக்கான காரணங்கள் வலுப்பெற்று சமூக, சமய வாழ்வை பாழ்படுத்திவிடும்".

இவ்வாறு பருத்துத்துறை மாவட்ட நீதிபதி திரு. எம். எம். அப்துல்காதர் இங்கு நடைபெற்ற சுவாமி விவேகானந்தர் நூற்றுண்டுவிழாவில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

பசுபதீஸ்வரன் ஆலய முன்றலில் நடைபெற்ற இவ்விழா வட இந்து மகளிர் கல்லூரி மாணவிகளது பக்திப்பாடல்களுடன் ஆரம்பமானது.

பொது நூல் நிலையத்தில் சுவாமிகளின் திருவுருவப் படத்தை நீதிபதி திரைநீக்கம் செய்துவைத்து தொடர்ந்து பேசுகையில் இன்றைய நிலையில் சமயங்களில் ஒருமைப்பாடும் மத மறுமலர்ச்சியும் அவசியம் வேண்டியன என்ருர். சமயங்களில் காணப்படும் ஒற்றுமைகளை ஒன்று சேர்த்து மக்கள் வாழ ஆன்மீகத்துறை மேம்பாடு அடைய சகல ஸ்தாபனங்களும் பெரியார்களும் உழைக்க முன்வர வேண்டும் என்ருர்.

பருத்துத்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் திரு. வி. இராமச்சந்திரன் விவேகானந்தரின் இளம்பிராயம் என்பது பற்றி சொற்பெருக்காற்றினர்.

வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகை பாகன் சிறப்புரை நிகழ்த்தினர்.

## கொடிகாமத்தில் பொலிசார் ரோந்து

கொடிகாமம், புதன்

திருடர்களின் கைவரிசையை முறியடிப்பதற்காக கொடிகாமம் கிராமசேவகர் திரு. அம்பலவாணர் தலைமையிலுள்ள தொண்டர் கோஷ்டியும் சாவகச்சேரிப் பொலிசாரும் கடந்த மூன்று தினங்களாக இரவு நேரங்களில் இங்குள்ள முக்கிய ஒழுங்கைகளில் ரோந்து சுற்றி வருகிருர்கள்

இரவு 10-30 மணிக்குப் பின் எவ்வித காரணமுமின்றி வீதிகளிலும், ஒழுங்கைகளிலும் யாராவது நடமாடினுல் அவர்களைப் பொலிசார் கைது செய்யத் தீர்மனித்திருப்பதாகவும் அவர்கள் மீது பொலிசார் சந்தேகப்பட்டால் வழக்கு தொடரப்படுமெனவும் தெரிய வருகிறது.

கொடிகாமத்தில் உள்ள கணபதிப்பிள்ளை என்பவரின் வீட்டில் ரூபா 5000 பெறுமதியான தாலிக்கொடியும், நகைகளும் களவு போனதை தொடர்ந்து மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

அடுத்த திரை விருந்து
எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
நானும் ஒரு பெண்
இந்திய ஜனதிபதியின் வெள்ளிப் பதக்கம்
பெற்ற சிறந்த சித்திரம்.

வெற்றிகரமான 8வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு)
லக்ஷ்மி (கொட்டாஞ்சேனை)
மற்றும் 8 திரைகளில்



எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் — பண்டரிபாய்
நடித்த
பராசக்தி

முன்பை விட இன்னும் அதிக சக்தி வாய்ந்தது!



அதை ஒழியுங்கள்!
"ப்ளெக் ப்ளேக்"
பலஇயக்க கிருமிநாசினி உங்கள் குடும்ப சுகாதாரத்தைப் பாதுகாப்பதோடு நோய் பரப்பும் விஷப் பூச்சிகளை உடனடியாக அழித்து விடுகிறது.

புதியதும் அதிக சக்தி வாய்ந்த மருந்து வகைகளையும் கொண்ட, பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" மூன்று வகைகளில் இயங்கக் கூடிய முதலாவது கிருமி நாசினியாகும்.

1. நேரடித்தாக்குதல் ஈக்கள், நுளம்புகள், கரப்பான், தெள்ளு, மூட்டைப் பூச்சிகள் போன்றவைகளை உடனடியாக அழித்து விடுகிறது.
2. பறந்து தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்ட பின் புகை போன்ற ஆவியாக மாறி, பல பகுதிகளுக்கும் பரவி மறைந்திருக்கும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.
3. தங்கித் தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் கண்ணுக்குத் தெரியாத, ஆனால் கொல்லும் சக்தி வாய்ந்த ஒரு வகை மெல்லிய படலமாக தங்கி... அதனுடன் சம்பந்தப்படும் சகல பறக்கும் பூச்சிகளையும், ஊர்ந்து செல்லும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.




டிடிவிபியுடன் (DDVP) கூடிய பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" கிருமி நாசினியை வாங்கி ஊர்ந்து, பறந்து செல்லும் கிருமிகளை அழித்து விடுங்கள்.
STR-BF/HA-T-6

## வானொலிநிகழ்ச்சிகள்

### வியாழன் 21-5-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட், 7-00 பேச்சு — 'நாடும் நாமும்', 7-15 நேயர்விருப்பம், 7-45 தொடர் நாடகம் — 'மட்டக்களப்பு மாப்பிள்ளை' — எஸ். பொன்னுத்துரை எழுதியது, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 கவிக்கோவை, 10-00 நிலையஒலிப்பதிவுகள்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 துதிப்பாடல்கள் — பாடுபவர் கே. சொக்கலிங்கம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை, 2-10 ஜே. எம். அப்துல்கனி — ஸிதார், 2-40 ஜெயபேரிகை.

மாலை 5-15 துதிப்பாடல்கள், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 காலத்திற்கேற்ற காலம் — பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி — சாத்தூர் ஏ. ஜி. சுப்பிரமணியம் — பாட்டு, 8-40 குரல்இசை, 10-00 இசைக்கோவை.

## 'சீன வேண்டுகோள் நியாயமற்றது'

கொழும்பு, புதன்

"சீன இலங்கை வர்த்தகத் தொடர்புகளுக்குச் சீனா அங்கீகரிக்கும் கப்பல்களைத்தான் உபயோகிக்கவேண்டும்" என்ற சீனாவின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வது சாத்தியமல்ல என்று வர்த்தக அமைச்சுக்குத் தெரிவிக்க உணவு அமைச்சுத் தீர்மானித்துள்ளது. சீன அரசாங்கம் இலங்கைக்கும் சீனாவுக்குமுள்ள கடல் ஒப்பந்தத்தின்கீழ் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

## கம்போடியா கோரிக்கை

நியுயோர்க், மே 0

அமெரிக்காவின் ஆக்கிரமிப்பைத் தடைசெய்யும்பொருட்டு இந்தோசீனா சம்பந்தமான மற்றுமொரு ஜெனிவா மகாநாடு கூட்டப்படவேண்டுமென்று கம்போடியா ஐ. நா. வில் தெரிவித்துள்ளது.

## ORDER NISI

In the District Courts of Jaffna.

In the matter of the intestate estate ofthe late Theogu Elias of Chulipuram.

Deceased.

Viyagula Mary widow of Theogu Elias of Chulipuram.

Petitioner.

No. T/1418 Vs.

1. Thaveethu Anthonimuthu, and
2. wife Loorthamma both of Chulipuram.
3. Elias packianathan of Chulipuram.
4. Thaveethu Thiruchelvam, and
5. wife Sinnamalar both of Chulipuram.

Minors. {6. Elias Arulnathan of do of the age of 19 years. 7. Elias Jeganathan of do of the age of 16 years.}

minors appearing by their Guardian-ad-litem the 3rd Respondent.

Respondents.

This matter coming on for disposal before T. Muttusamippillai District Judge, Iaffna on the 23rd day of December 1963 in the presence of Mr. T. Sangarappillai, Proctor on the part of the Petitioner and the affidavit of the petitioner dated 8th October 1963 having been read.

It is ordered that the 3rd Respondent abovenamed be appointed Guardian-ad-litem over the 6th and 7th minor Respondents abovenamed for the purpose of these proceedings.

In is further ordered that the petitioner abovenamed be declared entitled as the widow of the deceased abovenamed to have Letters of Administration to the estate of the said deceaed issued to her accordingly unless the Respondents abovenamed or any other person or persons interested shall on or before the 13th day of March 1964 and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Jaffna this 23rd day of December 1963.

Sgd. N. Sivagnanasundram,
District Judge, Jaffna.

Drawn by,
Sgd. T. Sangarapillai.
Proctor for Petitioner.
13-3-64.

Time to show cause extended to 29th May 1964.

(Sgd) N. Sivagnanasundaram.
District Judge, Jaffna.

## தனிநபர் கமிஷன்

கொழும்பு, புதன்

தபால் கட்டுபவர்களின் குறைகளை நிவிர்த்தி செய்வதற்காக அவர்களது முறையீடுகளை ஆராய்வதற்குத் தனிநபர் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது.

உத்தியோகஸ்தர்கள் பற்றாக்குறை, கட்டடங்களில் இடநெருக்கடி என்பவை பற்றி தபால் கட்டுவோர் சங்கம் அரசாங்கத்துக்கு முறையீடு செய்துள்ளது.

தபால் கட்டுவோர் சங்கம், கமிஷன் லோட்டன் வீதி மெயில் அறை, மக்கலம் வீதி மெயில் அறை, தீவு முழுவதிலுமுள்ள பிரதான தபால் கந்தோர்கள் என்பவற்றில் வேலை நடக்கும் முறை பற்றி ஆராயவேண்டும் என எதிர்பார்க்கிறது.


## வரி விளம்பரம்

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஒயில் சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஒயின்மென்ற் சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம் தடிமன், தலையிடி, சந்துவலி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்: GABRIELS,Chunnakam. 273

### தொய்வு, நீரிழிவு

...படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற ...ங்கள் அடங்கிய கற்றலை ...இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.


உ

சிவமயம்

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு



## வரவு செலவுக் கணக்கு 1 - 4 - 62 முதல் 31 - 3 - 63 முடிய

### செலவு

| | | |
|---|---|---|
| சம்பளம், கூலி முதலியன | | 23,724-86 |
| படிச்செலவு | | 141-75 |
| திருப்பணிக் கணக்கு | | 2,883-85 |
| அச்சிட்டதும் எழுத்து உபகரணங்களும் | | 1,371-18 |
| சில்லறைத் திருத்தங்கள் | | 433-78 |
| யந்திரம் பராபரித்தல் | | 900-25 |
| பூந்தோட்டம் பராபரித்தல் | | 38-15 |
| பிரயாணச் செலவு | | 582-52 |
| ஏற்று இறக்குக் கூலிகள் | | 1,109-80 |
| மகாகும்பா அபிஷேகச் செலவு | 12,318-14 | |
| ,, ,, வரவு | 2,693 23 மேல் அதிகச்செலவு | 9,625-11 |
| மாடு பராபரித்தல் | | 73-70 |
| விளம்பரம் | | 126-30 |
| தபால், தந்தி | | 145-55 |
| சில்லறைச் செலவுகள் | | 2,281-79 |
| செலபு நீக்கி வருமானம் | | 5,145-74 |
| | | 48,584-33 |

### வரவு

| | | |
|---|---|---|
| அர்ச்சனை | | 14,327-40 |
| அபிஷேகம் வரவு | 3,083-00 | |
| ,, செலவு | 699-69 | 2,383-31 |
| படித்தரம் வரவு | 8,832-95 | |
| ,, செலவு | 6,192-40 | 2,640-55 |
| திருவிழா வரவு | 3,350-00 | |
| ,, செலவு | 906-10 | 2,443-90 |
| உண்டியல் | | 9,664-60 |
| காணிக்கை | | 12,546-94 |
| வாடகை | | 2,091-50 |
| வழக்குச்செலவு வைப்புப்பணம் கச்சேரியால் | | 601-95 |
| சந்தாப்பணம் | | 430-00 |
| கற்பூரம் விற்பனவு | | 796-75 |
| தோ மலர் விற்பனவு | | 150-50 |
| வட்டி வங்கியால் | | 71-25 |
| சில்லறை வரவுகள் | | 435-68 |
| | | 48,584-33 |

## சமதிட்டக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மூலதனம் முன்வருடத்திட்டப்படி: | | 1,15,716-52 | |
| கூட்டு: 1961/62 வருடம் செலவு நீக்கி வருமானம் | | 3,399-75 | |
| | | 1,19,116-27 | |
| கூட்டு: செலவுநீக்கி இவ்வருட வருமானம் | | 5,145-74 | |
| | | 1,24 262-01 | |
| கூட்டு: தேர்த்திருப்பணிச் சபை சேர்த்த வரவு | 1,21,758-82 | | |
| திருப்பணி நிதி | 2,235-87 | | |
| காணிக்கை | 255-00 | | |
| தளபாடம்விற்பனவு | 2,199-50 | 1,26;449-19 | 2,50,711-20 |
| **நடப்பு செல்மதி** | | | |
| தொழிலாளர்களுக்கு | | 1,340-77 | |
| தொழிலாளர் பிணைப்பணம் | | 500-00 | 1,840-77 |
| | | | 2,52,551-97 |

### நிலையான உரிமைப் பொருள்

| | | |
|---|---|---|
| விக்கிரக மூர்த்திகள் | | 260-25 |
| திருஆபரணங்கள் | | 8,607-50 |
| பவுண், வெள்ளி | | 7,564-75 |
| மாடுகள் | | 90-00 |
| வாகனங்கள் | | 9,443-10 |
| ஆதனங்கள் | | 4,225-00 |
| கொட்டகை | | 7,059-91 |
| திருத்தேர் | | 1,25,000-00 |
| தேர்மண்டபம் (முன்வருடத்திட்டப்படி) | 29,777-70 | |
| தேர்முட்டி பிளேட் | 1,208-36 | 30,986-06 |
| யந்திரமும் மின்சார இணைப்புத்தளபாடமும் (முன்வருடத் திட்டப்படி) | 2,928-45 | |
| கூட்டு: இவ்வருடம் | 4,532-67 | 7,461-12 |
| வைரவர்கோவில் கட்டடம் | | 2,602-66 |
| கோவில் மின்சாரயந்திரக் கட்டிடம் (முன்வருடத் திட்டப்படி) | 5,265-31 | |
| கூட்டு: இவ்வருடம் | 8,803-51 | 14068-82 |
| தளபாடம் சென்றவருடம் | 20,481-45 | |
| ,, இவ்வருடம் | 2,980-10 | 23,461-55 |
| உள்வீதி கல்பதித்தல் சென்றவருடம் | 3,023-12 | |
| ,, ,, இவ்வருடம் | 3,393-81 | 6416-93 |
| நடப்பு வருமதி | | 3080-04 |
| மெர்க்கண்டெயில் வங்கி உரொக்கம் இருப்பு | | 724-05 |
| கைஉரொக்கம் இருப்பு | | 1501-13 |
| | | 2,52,551-97 |

### வருமதி

| | |
|---|---|
| பலபுள்ளி | 145-09 |
| இ. குமரையா | 420-00 |
| த. கிருஷ்ணசாமி | 462-50 |
| வே. பொன்னம்பலம் | 50-00 |
| கா. க. சிவசிதம்பரம் | 179-00 |
| மு. சி. துரைசாமி | 237-00 |
| எஸ். நடராசக் குருக்கள் | 50-00 |
| ப. கந்தசாமி | 159-00 |
| த. அமிர்தலிங்கம் | 307-83 |
| க. சோமசுந்தரம் | 48-80 |
| இ. குமரையா | 550-00 |
| மு. இராமலிங்கம் | 12-00 |
| கு. துரைசாமி | 30-00 |
| த. அழகரத்தினம் | 50-58 |
| என். வைத்திலிங்கம் அன் கோ | 21-75 |
| வே. செல்வநாயம் | 356-49 |
| | 3080-04 |

### செல்மதி

| தொழிலாளர்களுக்கும் பூஜகர்களுக்கும் | |
|---|---|
| கு. வை. முத்தையா | 481-27 |
| இ. வீரசிங்கம் | 60-00 |
| ப. பொன்னுச்சாமி | 175-00 |
| க. ஆறுமுகசாமி | 150-00 |
| கே. துரைசாமி | 50-00 |
| மு. செல்வத்துரை | 125-00 |
| ஐ. ஜம்புகேஸ்வரக்குருக்கள் | 66-50 |
| ச. பரமேஸ்வரக் குருக்கள் | 66-50 |
| எஸ். நடராசக் குருக்கள் | 100-00 |
| ஐ. கைலாசநாதக்குருக்கள் | 66-50 |
| | 1,340-77 |

தர்மபரிபாலன சபையின் சார்பாக

| செ. சிவஞானம் | கா. ஆறுமுகம் | கா. க. சிவசிதம்பரம் |
|---|---|---|
| கௌரவ தலைவர் | கௌரவ காரியதரிசி | கௌரவ தனாதிகாரி |

எனது அறிக்கைக்கு அமைய சரி என உறுதிப்படுத்துகின்றேன்.

கு. சச்சிதானந்தா
சாட்டேட் அக்கவுண்டன்
கௌரவ கணக்குப்பார்வையாளர்

கொழும்பு,
27-4-64

# தொழிலாளர் இடாப்புகளில் மோசடி

## சேவையிலில்லாதவர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளனவாம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சுகாதார அத்தியட்சகரின் கந்தோரில் தொழிலாளர் இடாப்புகள் மோசடி செய்யப்படுவதாக ஒரு முக்கிய தொழிலாளர் சங்கத்தினுல் செய்யப்பட்ட புகார் உண்மையெனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் இடாப்புகளில் சேவையில் இல்லாதவர்களின் பெயர்கள் பதிவு செய்து அவற்றிற்கெதிரில் வரவுப் புள்ளிகளிடப்பட்டு சம்பளமும் கொடுக்கப்பட்டு வருவதாக, சுகாதார சேவை அதிபருக்கு ஒரு தொழிலாளர் சங்கத்தினுல் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து சென்ற வாரம் இரு உயர்தர அதிகாரிகள் அனுப்பப்பட்டு விசாரணை நடைபெற்றது. அப்புகார்கள் உண்மையானவையெனக் கண்டு பிடித்து அவ்வதிகாரிகள் மோசடி செய்யப்பட்ட 14 இடாப்புகளை நடவடிக்கை யெடுப்பதற்காக கொண்டு போயுள்ளனரென்றும் தெரியவருகிறது.

இம் மோசடி பற்றியும் யாழ்ப்பாணம் சுகாதார அத்தியட்சகர் கந்தோரில் வேறு பல ஒழுங்கீனங்கள் இருப்பதாகவும் இவை யாவையும் நன்கு விசாரணை செய்ய ஒரு விசாரணைச் சபை நியமிக்குமாறும் மேல் குறிப்பிட்ட தொழிலாளர் சங்கம் சுகாதார மந்திரியைக் கேட்டுள்ளது.

---

யாழ். தொழில்நுட்பப் பாடசாலை

# பிரவேசவிண்ணப்பம் அனுப்ப குறுகிய அவகாசம்

## மாணவர் அதிருப்தி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் தொழில் நுட்பப் பாடசாலையில் 1964—65 வரையான கல்வி ஆண்டில் சேர்ந்து பல்வேறு வகுப்புகளில் படிக்கவிரும்புபவர்களிடமிருந்து பிரவேச விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பம் செய்ய ஒருவார அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது பரீட்சார்த்திகள் மத்தியில் அதிருப்தியை உண்டுபண்ணியுள்ளது. மற்றும் தொழில் நுட்பபாட சாலைகளுக்கான பிரவேச விண்ணப்பங்கள் சுமார் ஒன்றரை மாதங்களுக்கு முன்னதாகவே கோரப்பட்டது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் தொழில் நுட்பப் பாடசாலை, கல்லூரித் தரத்துக்கு உயர்த்தப்பட்டு புதிய பொறியியல், வர்த்தக போதனையினங்கள் சேர்க்கப்படலாம் என நம்பப்பட்டுவந்ததாகவும் வர்த்தமானியில் இவ்வித அறிவித்தல் எதுவும் குறிப்பிடப்படாதது பெற்றோர்கள்மத்தியிலும் மாணவர் மத்தியிலும் பெரும் அதிருப்தியை உண்டுபண்ணியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

முழுநேர, பகுதிநேர, மாலைநேர போதனையினங்கள் பதின்மூன்றுக்கான விண்ணப்பங்கள் இப்போது கோரப்பட்டுள்ளன. இவை பற்றிய விபரங்களை 3 ரூபா கொடுத்து பெறக்கூடிய பாடசாலைக் கையேட்டிலிருந்து அறிந்து கொள்ளலாம். இம்மாதம் 22-ந் திகதி வரை பாடசாலை கந்தோரிலிருந்து பெறக்கூடிய விண்ணப்பப்பத்திரங்கள் நிரப்பப்பட்டு இம்மாதம் 23-ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அதிபருக்கு அனுப்பப்படவேண்டும் என இம்மாதம் 15-ம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# கூட்டரசாங்கம் நிறுவ முட்டுக்கட்டை

# என். எம்மின் 9 அம்சதிட்டத்தை மந்திரிசபை நிராகரித்தது

கொழும்பு, புதன்

**நேற்று இரவு நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் ஒன்பது அம்ச கோரிக்கையைஅப்படியே ஏற்றுக் கொள்ள முடியாதென மந்திரிசபை மறுத்து விட்டதாக தெரிய வருகிறது. இதனுல் பிரதமர் - இ. ஐ. மு. பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.**

**மந்திரி சபையின் இம்முடிவுக்கு பின்னர் என்ன எப்போது நடைபெறும் என்பதை சொல்ல முடியாமல் உள்ளதாகவும் கூறப்படுகிறது.**

**பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தை பற்றி ஆராய்வதற்காக இடதுசாரி தலைவர்கள் டாக்டர் விக்கிரமசிங்காவின் இல்லத்தில் இன்றிரவு கூடினர்கள். பிரதமருக்கும் இ. ஐ முன்னணிக்குமிடையில் பேச்சுவார்த்தை நாளையும் நடைபெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.**

தமக்கும் இ. ஐ. முன்னணிக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை சினேக பூர்வமான முறையில் நடைபெற்றதாக பிரதமர் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார். பிற்போக்கு சக்திகளிடமிருந்து நாட்டை காப்பாற்றி, நாட்டு நலனை கவனித்து, நிர்வாகத்தை சீர்குலையாமல் நடத்த வேண்டும் என்பதே தமது கொள்கை எனவும், காலஞ்சென்ற பிரதமரின் கொள்கையை செயல்படுத்த முற்போக்கு சக்திகள் உதவிசெய்ய வேண்டுமெனவும் பிரதமர் கேட்டுக் கொண்டதாக தெரிகிறது. பிற்போக்கு சக்திகளை முறியடிக்க வேண்டுமென்பதை தாம் ஒப்புக்கொள்வதாகவும், தமது 9 அம்ச திட்டத்தின் மூலம் சகல பிரச்னைகளை தீர்த்துக்கொள்ளலாம் எனவும் இ. ஐ முன்னணியினர் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

### மந்திரிசபை ஆலோசனை

இடதுசாரித் தலைவர்களை சந்திக்கு முன்னர் இன்று காலை பிரதமர் கூட்டரசாங்கம் பற்றி மந்திரிகளுடன் கலந்தாலோசித்தார். சமசமாஜிக் கட்சியைச் சேர்ந்தவர்களைத் தவிர மற்றவர்களுக்கு மந்திரி பதவிகள் கொடுக்கக் கூடாது என சிலமந்திரிகள் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

---

# அரசாங்க லிகிதர் சங்க ஆண்டு மாநாடு

கொழும்பு, செவ்.

அரசாங்க லிகிதர் சேவைச் சங்க ஆண்டு மாநாடு இம்மாதம் 30-ந் திகதி சனிக்கிழமை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும்.

பின்வரும் தீர்மானங்கள் தாய்ச்சங்க கௌரவ பொதுச் செயலாளரால் மாநாட்டில் பிரேரிக்கப்படும்.

ஆசிரியர்கள், அரசாங்க கார்ப்பரேஷன் ஊழியர்கள், ஸ்தல ஸ்தாபன சேவை ஊழியர்கள் உட்பட எல்லா அரசாங்க ஊழியர்களுக்கும் பூரண தொழிற் சங்க அரசியல் குடியுரிமைகளும், தொழிற் சங்க உத்தியோகத்தர்களுக்கு எல்லாத் தோட்டங்களிலும் பிரவேச உரிமையும் வழங்கப்படுதல் வேண்டும்.

அரசகரும மொழிச் சட்டத்தையும், தமிழ் மொழி விசேஷ ஷரத்துக்கள் சட்டத்தையும் அமுலாக்கும் பொழுது அரசாங்க சேவைப் பழைய ஊழியர்களுக்கும் ஸ்தலஸ்தாபன ஊழியர்களுக்கும் கஷ்டம் அளிப்பதில்லை என்ற காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

---

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், வியாழன்

இம்மாதம் 27-ம் திகதி புதன் மாலை 6 மணிக்கு உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவிலில் திரு. செ. தனபாலசிங்கம்எழுதிய "முருகன் மணவாளன்" என்ற நூலின் வெளியீடு நடைபெறும். நூலின் வருவாய் மேற்படி ஆலயத் திருப்பணிக்கே சேர்க்கப்படும் எனவும் தெரிய வருகிறது.

---

## காணமல் போய்விட்டார்

எனது மகன் இந்திரராசா அல்லது ராசு சென்ற 6-5-64 காலை கண்டாவளை பஸ்ஸில் யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்குப் போனவர், இது வரை காணவில்லை. வயது 10. பொதுநிறம், உயரம் மூன்றரை அடி. வெள்ளைசேட், அரைக் காற்சட்டை அணிந்திருந்தார், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் படிப்பவர். கண்டுபிடித்துக் கொடுப்பவருக்குச் சன்மானம் வழங்கப்படும் க. பொன்னுத்துரை கணேச கடை, சாவகச்சேரி.

429

---

# திருமண அழைப்பு

நிகழும் குரோதி வருடம் வைகாசி திங்கள் 10-ம் நாள் (23-5-64) சனிக்கிழமை இரவு 10 . 26 தொடக்கம் 11 . 24 வரையுள்ள மகரலக்கின சுபமுகூர்த்த வேளையில் எமது சிரேஷ்ட புத்திரி கமலாதேவிக்கும் மட்டுவில் வடக்கு செல்லப்பா பொன்னையா அவர்கட்கும் மணமகன் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு நண்பர்களையும் உறவினர்களையும் அழைக்கின்றோம்.

இங்ஙனம் வே. நடேசபிள்ளையும் பாரியாரும் (ப. நோ. கூ. ச. மனேஜர்) துணுக்காய்

431

---

# மரண அறிவித்தல்

## இந்துமதி சிவஞானம்

காலஞ்சென்ற திரு. சிவஞானம் அவர்களின் அருமை மனைவியும் திரு. அ. இராசரத்தினம், திருமதி அ. இராசரத்தினம் அவர்களின் அருமை மகளும் சிவானந்தசோதி, சிவஞானசோதி, இரத்தினசோதி, நவசோதி, சந்திரமதியின் அருமைச் சகோதரியுமான இந்துமதி சிவஞானம் காலமாகி விட்டார். அன்னாரின் பூதவுடல் 21-5-64 ல் காலை 11-00 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக காங்கேசன் துறை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். கல்லூரி வீதி, காங்கேசன் துறை.

433

---

# நிர்வாகிகள், தொழிலாளர்கள் ஒத்துழைப்பு அவசியம்

## நிதிமந்திரி அறிவிப்பு

கொழும்பு, செவ்.

'வேலையளிப்பவர்களும் வேலை செய்பவர்களும் ஒத்துழைப்பதால் நாடு மிக்க பயனையடைவதாக இருக்கும். தவிர்க்கக் கூடிய சச்சரவுகள் வளர்க்கப் படுவதால் நேரம் வீணாக்கப்படுகிறது. இவை தவிர்க்கப்பட்டால் எவ்வளவோ நன்மை விளைவதாக இருக்கும். நாட்டின் உற்பத்திப் பெருக்கத்துக்கு இரு சாரினரது ஒத்துழைப்பும் மிக்க அவசியமானது'

இவ்வாறு நிதி மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன, தொழிலாளர்கள் கூட்டுத்தாபனங்களின் நிர்வாகத்தில் பங்கு கொள்வது பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசேஷ குழுவின் முதலாவது கூட்டத்தில் கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

நிதிமந்திரி மேலும் கூறியதாவது:

"தொழிலாளர்கள்நிர்வாகத்தில் பங்கு கொள்வதால் முகாமையாளருக்கும் அவர்களுக்குமிடையில் ஒத்துழைப்பு ஏற்படும் இதனுல் ஸ்தாபனம் சீராக இயங்க வழியமையும்.

1956-ம் வருடத்துக்கு பின்னர் தொழிற்சங்கங்கள் அவற்றுக்குரிய அந்தஸ்தைப் பெற்றன. இதனுல் தொழிலாளர்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது.

தொழிலாளர்களுக்கும் முகாமையாளருக்குமிடையில் சுமுகமான உறவுகள் இருப்பது நிர்வாகத்தை நல்லமுறையில் நடத்திச் செல்ல மிக்க உதவியாக இருக்கும்."

இதற்கான வழிவகைகளைத் தயாரிக்கும் முயற்சியில் மேற்படி குழு வெற்றி பெறவேண்டுமெனத் தாம் விரும்புவதாகவும் மந்திரி தெரிவித்தார்.

## தி. மு. க. வினர் கைது

திருச்சி, மே. 19

தி. மு. க. வினரின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் ஒரு அம்சமான மறியல் இயக்கத்தில் ஈடுபட்ட நூற்றுக்கு மதிகமான தி. மு. க. வைச் சேர்ந்த தொண்டர்கள் நேற்று திருச்சியில் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் 14 இடங்களில் அரசாங்க காரியாலயங்களின் முன் மறியல் செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**Tution**

Undergrades offer Tution in Chemistry, Physics, Pure, Advanced, Applied Mathematics for Pre G. C. E., G. C. E. university Entrance. Contact Shanmugathasan, 204 Navalar Road, Jaffna. 428

---

# சிசுக்கொலை வழக்கில் டாக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

கோண்டாவில் சிசுக்கொலை வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. டபிள்யு. அரசுவாலடன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது இதற்கு முன்னர் நடைபெற்ற விசாரணையில் சாட்சியமளித்த டாக்டர் ஜீவநாயகம் தொடர்ந்து சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் கோண்டாவிலைச் சேர்ந்த செல்லன் கதிரன் தனது மகள் சரஸ்வதி பெற்ற குழந்தையைக் கொலை செய்ததாக கோப்பாய் பொலிஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் இராஜநாயகத்தினுல் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

எதிரியின் சார்பில் திரு. ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் ஆஜராஞர்.

டாக்டர் ஜீவநாயகத்தின் சாட்சியம் முடிவுற்றதும் மாஜிஸ்டிரேட் மேல் விசாரணையை மே 30-ந் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

---

# அவுஸ்திரேலிய தூதர் யாழ்ப்பாணம் வருவார்

சுழிபுரம், செவ்வாய்

அடுத்த மாதம் 6-ம், 7-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் யாழ்-மாவட்ட சன சமூக நிலைய சமாஜ தேசிய விழா யசட்டு விழாவில் அவுஸ்திரேலியத் தூதர் திரு. பி. சி. பாலாட் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவிருக்கிறார்.

---

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் குரோதி வருஷம் வைகாசி மாதம் 8-ந் திகதி (21-5-64) வியாழக்கிழமை இரவு 11-00 மணி முதல் 11-45 மணி வரையில் வரும் சன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில் எங்கள் புத்திரன் திருநிறைசெல்வன் சுப்பிரமணியசிவத்திற்கும் (உரிமையாளர் சிவாஸ் கோ யாழ்ப்பாணம்) இணைப்பாதிய கிராம அதிகாரி வ கணபதிப்பிள்ளையின் புத்திரி திருநிறைசெல்வி அருந்தவமலருக்கும் மணமகன் இல்லத்தில் இனிது நடைபெற இருக்கும் திருமண வைபவத்திற்கு தாங்களும் தங்கள் சுற்றத்தாரும் சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும் எஸ். துரைராசாவும் பாரியாரும் (கொழும்பு றெஸ்ரோறென், யாழ்ப்பாணம்) ஜெயபதி, இணுவில் தெற்கு, இணுவில்.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 21-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது